(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 2 (4).]

# பாராளுமன்றம்

## 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2010, திசெம்பர் 22, புதன்கிழமை வெளியிடப்பட்டது

## 2011, சனவரி 04, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0848/ '10

கௌரவ விக்டர் அன்ரனி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) புத்தளம் மாவட்டடத்திலுள்ள ஒரேயொரு விவசாய பொருளாதார மத்திய நிலையம் கல்பிட்டி பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தின் நொரச்சோலைப் பிரதேசத்தில் அமைந்துள்ளதென்பதையும்,

(ii) கல்பிட்டி பிரதேச சபை ஆளுகைப் பிரதேசம் செழிப்பற்ற நீண்ட மணல் நிலப்பரப்பினால் மூடப்பட்டுள்ளதென்பதையும்,

(iii) மேற்படி பிரதேசத்தின் விவசாயிகள் யூரியா உட்பட இரசாயன பசளைகளை இட்டு செழிப்பாக்கிக் கொள்கின்ற மேற்படி செழிப்பற்ற மணல் நிலப்பரப்பில் இலங்கைக்குத் தேவையான சின்ன வெங்காயம்,மரக்கறி, பழங்களுக்கான தேவையில் சுமார் 1/3 ஐ மிக வெற்றிகரமாக உற்பத்தி செய்கின்றனரென்பதையும்,

(iv) ஆயினும், நெற் செய்கைக்கான யூரியா உட்பட ஏனைய பசளைகளுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற மானியம் கல்பிட்டியில் மேட்டு நிலப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகளுக்கு கிடைப்பதில்லை என்பதையும்,

அவர் அறிவாரா?

(ஆ) நெற் செய்கைக்காக வழங்கப்படுகின்ற உர மானியத்தை செழிப்பற்ற நிலத்துடன் போராடுகின்ற மிகப் பின்தங்கிய கல்பிட்டி பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தின் மேட்டு நிலப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கும் வழங்குவது பொருத்தமாகுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) ஆமெனில், மேற்படி உர மானியத்தை கல்பிட்டி விவசாயிகளுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2011, சனவரி 05, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

0877/ ’10

கௌரவ அஜித் பி. பெரேரா,— சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) வீரவில சர்வதேச விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்காக 2007,2008, 2009, 2010 ஆகிய வருடங்களில் செலவிட்ப்பட்ட தொகை வருடாந்தம் தனித்தனியே எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி கருத்திட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றதா என்பதையும்,

(iii) இன்றேல், இதற்கான காரணங்கள் யாவையென்பதையும்,

(iv) மேற்படி கருத்திட்டம் கைவிடப்பட்டதால் இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டம் எவ்வளவென்பதையும்,

(v) மேற்படி நட்டம் ஏற்படுவதற்கு பொறுப்பானவர் அல்லது பொறுப்பானவர்கள் யார் என்பதையும்,

(vi) இவர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0706/ ’10

கௌரவ கயந்த கருணாதிலக,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) காலி மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும், 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான ஒவ்வோர் ஆண்டிலும் யூன் மாதம் 30ஆம் திகதியன்று உரித்துடையோராயிருந்த சமுர்த்தி பெறுநர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

(ii) அவ்வாறு உரித்துடையோருக்குச் செலுத்தப்பட்ட பணத் தொகைகள், இவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்,

(iii) 2005, 2006, 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் சமுர்த்தி பெறுநர்களுக்கு ஆண்டுதோறும் செலுத்தப்பட்ட மொத்தப் பணத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வோர் ஆண்டிலும் சமுர்த்தி பெறுநராக விளங்கிய எனினும், பின்னர் நீக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை, இவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்,

(ii) அவ்வாறு நீக்கப்பட்டதற்கான அடிப்படை யாதென்பதையும்,

(iii) மேற்படி கால எல்லையில் புதிதாகச் சேர்ந்த சமுர்த்தி பெறுநர்கள் இருப்பார்களாயின் இவர்களுக்குச் செலுத்தப்பட்ட பணத் தொகை மற்றும் இவர்களின் முகவரிகள் ஆண்டுதோறும் தனித்தனியாக யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0707/ ’10

கௌரவ துனேஷ் கங்கந்த,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) வடக்கு கிழக்கு புனர்வாழ்வு அமைப்பு (NERDO - North East Rehabilitation and Development Organization) என்ற அமைப்பொன்று இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், பதிவு செய்யப்பட்ட திகதி யாதென்பதையும்,

(iii) அவ்வமைப்பு தாபிக்கப்பட்ட நோக்கங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி அமைப்பின் அலுவலகம் அமைந்துள்ள இடம், அதன் முக்கியஸ்தர்களின் பெயர்கள், பணியாளர்களின் எண்ணிக்கை, இவர்களின் பெயர்கள் மற்றும் விலாசங்கள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2011, சனவரி 06, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0883/ '10

கௌரவ (அல் ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் புல்மேட்டைப் பிரதேசத்தில் ஐம்பது வருடங்களுக்கும் மேலான காலம் தொட்டு கமத்தொழிலில் ஈடுபட்டுவரும் முஸ்லிம் விவசாயிகளின் காணிகளுக்கு இதுவரை உரமப்பத்திரம் வழங்கப்படவில்லை என்பதையும்,

(ii) இந்நிலைமை காரணமாக விவசாய நிலங்களை துப்புரவு செய்கின்றபோது மற்றும் மேற்படி நிலங்களில் கமத்தொழிலை மேற்கொள்ளும் போது இந்த மக்களுக்கு பலவித இடையூறுகள் ஏற்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி விவசாயிகளின் காணிகளுக்கு விரைவில் உரிமப் பத்திரங்களை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0886/ '10

கௌரவ விஜித ஹேரத்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கம்பஹா மாவட்டடத்தின் பபிலியவல, பல்லேகமவில் அமைந்துள்ள, மே.மா/கம்/ஆனந்தா வித்தியாலயத்தில், 2011 ஆம் அண்டின் முதலாம் தரத்திற்கு பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்வதற்காக நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்ட திகதிகள் யாவை என்பதையும்,

(ii) தகைமை பெற்ற மற்றும் தகைமை பெறாத விண்ணப்பதாரிகளினதும் பெயர், விலாசம், உரிய பிரிவு மற்றும் புள்ளிகள் யாவை என்பதை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) அமைச்சின் தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம், விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பதிவு செய்யப்பட்ட வாக்காளர் பெயர் பட்டியல்களின் தகவல்களை உறுதி செய்வதற்கு கிராம உத்தியோகத்தரின் கடிதம் தேவைப்படுகின்றதா என்பதையும்,

(ii) கிராம உத்தியோகத்தரின் கடிதம் காணப்படாமையினால் மட்டும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய உறுதிப்படுத்தும் ஆவணங்களைப் பரிசீலனை செய்வதை நிராகரிப்பதற்கு நேர்முகப் பரீட்சைக் குழுவுக்கு இயலுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) கிராம உத்தியோகத்தரின் கடிதத்தைக் கொண்டிராத சில விண்ணப்பதாரிகள், மீண்டும் நேர்முகப் பரீட்சைக்காக வேறொரு தினத்தில் அழைக்கப்பட்டிருந்தனர் என்பதையும்,

(ii) இது குறித்து முறையான அறிவித்தல் செய்யப்படாமையினால், விண்ணப்பதாரியொருவர் அநீதிக்கு உள்ளானார் என்பதையும்,

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஈ) (i) இதன்படி, அநீதிக்கு உள்ளான அவ்விண்ணப்பதாரிக்கு, நீதியை நிறைவேற்றி வைப்பதற்கும்,

(ii) இது தொடர்பாக முறையான விசாரணையை நடத்துவதற்கும்

அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(உ) இன்றேல் ஏன்?

## 2011, சனவரி 07, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

0570/ '10

கௌரவ கரு ஜயசூரிய,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) ரத்தொழுகம வீடமைப்புத் தொகுதியில் எஞ்சியுள்ள காணித்துண்டுகளை விற்பனை செய்ய வீடமைப்பு அதிகாரசபையினால் அமுலாக்கப்பட்ட திட்டமொன்று அங்குள்ள வீடு பெறுநர்களால் மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களிடம் செய்த முறைப்பாட்டிற்கிணங்க இடைநிறுத்தப்பட்டதென்பதையும்,

(ii) இது சம்பந்தமாக சனாதிபதி புலமைப்பிரிவு மேற்கொண்ட விசாரணையின் பரிந்துரையை சனாதிபதி செயலாளர் வீடமைப்பு, அபிவிருத்தி அதிகார சபையின் அப்போதைய தலைவருக்கும், வீடமைப்பு, நிர்மானத்துறை அமைச்சின் செயலாளருக்கும் தொர்பு இல. SP/4/2/4/2/1 மற்றும் 2006.02.28 ஆம் திகதிய கடித மூலமாக அறிவித்துள்ளாரென்பதையும்,

(iii) அக்கடிதத்தில் (சுருக்கமாக) "எஞ்சியுள்ள சிறிய காணித்துண்டுகளை கிட்டத்தட்ட 23 வருடகாலமாக அந்த வீடுகளில் வசிப்பவர்கள் அனுபவித்து வந்துள்ளமையால் அவர்களுக்கு விற்பதன் மூலமாக கையளிக்க மேன்மைதங்கிய சனாதிபதியவர்களின் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. சனாதிபதியின் புலனாய்வுத் துறையின் பரிந்துரைக்கிணங்க ரத்தொழுகம வீடமைப்புத் தொகுதியைச் சுற்றி செல்வதற்குள்ள வீதியை காணித்துண்டு 1820 இலிருந்து வேறாக்குவதும் காணித்துண்டு 1819ஐ அண்டிய வீடகளில் வசிப்போருக்கு விற்பனை செய்வதன் மூலமாக கையளிப்பதும் பொருத்தமானதென அறிவிக்கிறேன்." எனக் குறிப்பிடப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேன்மைதங்கிய சனாதிபதியவர்களின் மேற்படி பணிப்புரையை தாமதமின்றி நிறைவேற்ற அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0843/ '10

கௌரவ விக்டர் அன்ரனி,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) மூன்று கட்டங்களைக் கொண்ட நுரைச்சோலை நிலக்கரி அனல் மின் நிலையத்தின் முதற்கட்டப் பணிகள் பூர்த்தி செய்யப்படும் திகதி யாதென்பதையும்,

(ii) இந்த மின் நிலையத்தின் மின்சார உற்பத்தித் திறனின் அடிப்படையில் அபிவிருத்தி செய்ய எதிர்பார்த்துள்ள நிலப்பரப்பின் அளவு யாதென்பதையும்,

(iii) இந்த மின்சாரக் கருத்திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ள திகதி யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இந்த மின்சாரக் கருத்திட்டத்தினால் பகுதிவாழ் மக்களுக்கு நன்மை விளைகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்கிறாரா?

(இ) ஆமெனில், அத்தகைய பயன்கள் பற்றிய விடயங்களை விபரமாக அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2011, சனவரி 18, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0239/ '10

கௌரவ சஜித் பிரேமதாச, — கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்பாந்தோட்டை வலயக் கல்விக் காரியாலயத்திற்குரிய சூரியவெவ கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளுக்கும், பொதுவான தேவைகளுக்கும் பற்றாக்குறை நிலவுகிறதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இப்பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற ஆசிரியர் விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) அவற்றிற்குரிய பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(v) மரத்தளபாடங்களுக்கான தேவை காணப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(vi) அத்தேவைகள் யாவையென்பதையும்,

(vii) விஞ்ஞான கூடங்கள் மற்றும் நூலகங்கள் அற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(viii)அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்யத் தேவையான நிதியை அப்பாடசாலை களுக்கு ஒதுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அது எவ்வளவு காலத்தினுள் நடைபெறுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0317/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— சக்தி மற்றும் வலு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டியதாக உள்ள மொத்த தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) இலங்கை மின்சார சபைக்கான பத்து பெரிய கடன்பட்டோரின் பெயர்களையும்,

(iii) உயர்ந்த கடன் காரணமாக CEB ஆல் பெறப்பட்ட கடன்களுக்காக செலுத்த வேண்டிய வட்டியையும்,

(iv) இந்த நிலைமையை சமாளிப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கையையும்,

(v) கடன் கொடுத்தோருக்கு இலங்கை மின்சாரசபை செலுத்தவேண்டியுள்ள தொகையையும்,

(vi) இலங்கை மின்சார சபையின் மிகப்பெரிய கடன் கொடுத்தோர் பத்து பேரின் பெயர்களையும்,

(vii) கடந்த ஆறு வருடங்களாக அப்பணம் செலுத்தப்பட வேண்டிய திகதிகளையும்

அவர் சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) இலங்கை மின்சாரசபையின் செயல்திறன் இன்மையும், அதன் உயர்ந்தளவு கடன்களுமே உயர்ந்த மின்கட்டணங்களுக்கும் எரிபொருள் விலைகளுக்குமான காரணங்களாகும் என்பது சரியானதா?

(இ) (i) இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் மீது ச.நா.நி இனால் பிரகடனப்படுத்தப்பட்ட நிபந்தனைகளையும்,

(ii) அந் நிபந்தனைகளை இலங்கை மின்சாரசபையும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் நிறைவேற்றப் போகின்றனவா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0410/ '10

கௌரவ திலும் அமுனுகம,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2004 ஆம் ஆண்டில் அரச சேவையிலிருந்த ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) 2010 ஆண்டில் அரச சேவையிலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) 2004 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலும் இந்த ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்,

(ii) இவ்வாறு அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0529/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், திருக்கொண்டுயாடுமடு - ஜயந்திபுர வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்படடு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாது என்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல், வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0545/ '10

கௌரவ சாந்த பண்டார,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 1948 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையிலான காலப்பகுதியினுள் இலங்கை விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்டார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்ட அந்த விளையாட்டு வீரர்களின் பெயர் பட்டியல் மற்றும் அந்த வீரர்கள் பெற்றுக்கொண்ட வெற்றிகள், அதனுடன் தொடர்பான வருடங்கள் என்பவற்றை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) எதிர்வரும் ஒலிம்பிக் போட்டி நடைபெறும் இடம் மற்றும் வருடம் யாதென்பதையும்,

(ii) அந்தப் போட்டிகளில் இலங்கையின் விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்கிறார்களா என்பதையும்,

(iii) அதன் பொருட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள செயற்திட்டம் என்ன என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0624/ '10

கௌரவ ஆர். யோகராஜன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கொழும்பு 12, ஹுசைனியா வீதி, இலக்கம் 45 இல் அமைந்துள்ள ஹமீட் அல் ஹுசைனியா கல்லூரியில் கடும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலையில் அங்கீகரிக்கப்பட்ட சிங்கள, தமிழ் மொழி மூல ஆசிரிய ஆளணியை பாடவாரியாகவும்,

(ii) ஒவ்வொரு மொழி மூலத்திலும் பாடரீதியாக தற்போதுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கையையும்,

(iii) ஒவ்வொரு மொழி மூலத்திலும் பாடரீதியாக தற்போது காணப்படுகின்ற ஆசிரியர் பற்றாக்குறை எவ்வளவு என்பதையும்,

(iv) மேற்படி ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படவிருக்கும் நடவடிக்கையையும்,

(v) அந்நடவடிக்கைகள் எப்போது மேற்கொள்ளப்படுமென்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) ரோயல், ஆனந்த மற்றும் நாளந்த ஆகிய கல்லூரிகளில் மேலதிகமாக ஆசிரியர்கள் உள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) மேற்படி (இ) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைகளில் மேலதிகமாக காணப்படுகின்ற ஆசிரியர்களது எண்ணிக்கையை போதனா மொழி ரீதியாகவும் பாடவாரியாகவும் யாதென்பதையும்,

(ii) ஹமீட் அல் ஹுசைனியா கல்லூரியில் தற்போது நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்காக மேலதிக ஆசிரியர்களை இப்பாடசாலைக்கு இடமாற்றம் செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0708/ '10

கௌரவ துனேஷ் கங்கந்த,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2005 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஓகத்து மாதம் வரையிலான காலப்பகுதியில் கொரிய அரசினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்திற்கும் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி தொழில் வாய்ப்பை பெற்றுக்கொள்வதற்கு நபரொருவர் பின்பற்ற வேண்டிய செயல் நடைமுறைகள் யாவையென்பதையும்,

(iii) அத்தொழில்களுக்காக சென்ற ஆட்களின் எண்ணிக்கை மாவட்ட மட்டத்தில் வெவ்வோறக எவ்வளவென்பதையும்,

(iv) கொரிய தொழில் வாய்ப்புக்காக இருக்க வேண்டிய அடிப்படை தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஏற்கனவே வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்திற்கும் ஏற்ப வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்துகொண்டுள்ள கொரிய தொழில்வாய்ப்பு விண்ணப்பதாரி ஒருவரின் பதிவு செல்லுபடியாகும் கால எல்லை யாதென்பதையும்,

(ii) மேற்படி பதிவு இரத்தான தொழில் வாய்ப்பு விண்ணப்பதாரி ஒருவர் கொரியாவில் தொழிலொன்றை பெற்றுக்கொள்வதற்காக மீண்டும் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் யாவையென்பதையும்,

(iii) எதிர்காலத்தில் இதற்காக ஆட்களை தெரிவு செய்யும் போது ஏற்கனவே வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள தொழில் வாய்ப்பு விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0731/ '10

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் III ஆம் வகுப்பு, IIஆம் தரத்திற்கான, வரி உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை, 2006 ஆம் ஆண்டில் நடைபெற்றது என்பதையும்,

(ii) மேற்படி பரீட்சைக்குத் தோற்றிய 16,000 விண்ணப்பதாரிகளில் ஏறத்தாழ 1,000 போர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டனர் என்பதையும்,

(iii) இவர்களில் 550 பேருக்கு, 2007 ஆம் ஆண்டு ஏப்பிரல் 01 ஆம் திகதி தொடக்கம் நியமனம் வழங்கப்பட்டது என்பதையும்,

(iv) மேற்படி நியமனம் பெற்றவர்களிடையே, இப்பரீட்சை தொடர்பாக, 2006 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று பட்டப்படிப்புச் சான்றிதழைக் கொண்டிராதவர்களும் உள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) வரி உத்தியோகத்தர்களுக்காக நியமனம் பெற்ற மேற்படி ஒவ்வொரு வேட்பாளரினதும் பெயர், விலாசம் மற்றும் பெற்ற புள்ளிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்,

(ii) 2006.12.08 ஆம் திகதி முற்பகல் 9.30 க்கு, நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய, ஜா - எல கிழக்கு, துடல்ல, 76/சீ எனும் இலக்கத்தில் வசிக்கும், திருமதி டபிள்யு.ஏ.எஸ்.எம். சொவிஸ் இப்பரீட்சையிலும் நேர்முகப் பரீட்சையிலும் பெற்றுக்கொண்ட புள்ளிகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0781/ '10

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) தற்போது கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் முப்படை, பொலிஸ், பொலிஸ் அதிரடிப்படை மற்றும் சிவில் பாதுகாப்பு சேவைகளில் ஈடுபட்டிருக்கையில் தமது கணவர்மாரை இழந்த பெண்களின் எண்ணிக்கை, மாவட்ட ரீதியில் வெவ்வேறாக யாதென்பதையும்,

(ii) மேற்படி விதவைப் பெண்களுக்காக அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ள நலன்புரிச் சேவைகள் யாவையென்பதையும்,

(iii) அவர்களது பிள்ளைகள் தொடர்பில் அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ள நலன்புரிச் சேவைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0791/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் முலட்டியன வலயக் கல்வி காரியாலயத்திற்குரிய முலட்டியன கோட்டக்கல்வி அலுவலகத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்க பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) இப்பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதையும்,

(iii) இப்பாடசாலைகளில் தற்போது மூடப்பட்டுள்ள அல்லது மூடுவதற்காக தீர்மானிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(iv) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கோட்டத்தில் ஆசிரியர் மிகை நிலவுகின்ற பாடசாலைகள் உள்ளனவா என்பதையும்,

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) ஆசிரியர் மிகை நிலவுகின்ற பாடங்கள் யாவையென்பதையும்,

(iv) ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(v) ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடங்கள் யாவையென்பதையும்,

(vi) இவ்வாசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடசாலைகளுக்கு ஆசிரியர்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(vii) ஆமெனில், இதற்காக எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்,

அவர் இச்சபைக்குக் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0379/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இன்று பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கு அனுமதிக்கப்பட்டுள்ள பொலிஸ் ஆளணியினர் அல்லது அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவு ஆளணியினர் ஆகியோரது எண்ணிக்கை என்னவென்பதை தனித்தனியாகவும்,

(ii) அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவினர் வேறுயாருக்காக பணிக்கமர்த்தப்பட்டுள்ளர் என்பதையும்,

(iii) அவ்வாறு அனுமதிக்கப்பட்ட ஆளணியினர் எண்ணிக்கை என்னவென்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) இற்றைவரை பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோர் தவிர்ந்த ஏனையவர்களுக்காக பணிக்கமர்த்தப்பட்டுள்ள அமைச்சுப் பாதுகாப்புப் பிரவினரின் பட்டியலொன்றை அவர் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) இன்று வரை பொலிஸ் அல்லது அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவினரின் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்கின்ற தோல்வியடைந்த அபேட்சகர்கள், தோல்வியடைந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரது பெயர்களையும்,

(ii) அவர்களுக்காக பணிக்கமர்த்தப்பட்டுள்ள ஆளணியினரின் எண்ணிக்கை மற்றும் அவர்கள் எங்கிருந்து பெறப்பட்டனர் என்பதையும்,

(iii) இவ்விதமான வேலைக்கமர்த்தலின் பொழுது பின்பற்றப்பட்ட நடைமுறை என்னவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) உயர்நீதிமன்ற, மேல்நீதிமன்ற, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ள பொலிஸ், நீதித்துறைப் பாதுகாப்புப் பிரிவு, அல்லது அமைச்சுப் பாதுகாப்பு பிரிவு ஆளணியினரின் எண்ணிக்கை என்னவென்பதையும் அவர் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0525/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அம்பாந்தோட்டை மீன்பிடித் துறைமுகத்தை பயன்படுத்துகின்ற பெரும் அளவிலான பாரம்பரிய மற்றும் புலம்பெயர் மீனவர்கள் தற்போது பல கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனரென்பதையும்,

(ii) மேற்படி கஷ்டங்களில், மீன்பிடித் துறைமுகத்தில் மணல் நிரம்புதல், சாதாரண மீனவர்களின் சிறிய படகுகள் மற்றும் வள்ளங்களை நிறுத்தி வைப்பதற்கான இடவசதிகள் இல்லாமை , புலம்பெயர் பன்நாட் கலங்களுக்கு துறைமுகத்தை மட்டுப்படுத்தல், துறைமுக அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் பல்வேறு முறைகளில் மீனவர்களிடமிருந்து பணம் பெறுதல், கடற்படையினரின் சோதனைகள் காரணமாக உரிய நேரத்தில் தொழிலுக்குச் செல்ல முடியாமை, மற்றும் கடலில் மீனவர்கள் கடற்படையினரின் பலவிதமான தடைகளுக்கும் இலக்காகுதல், ஆகிய காரணங்கள் பிரதானமானவையாகும் என்பதையும்,

(iii) மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு 100 – 150 வருட அனுபவத்தைப் பெற்றுள்ள பாரம்பரிய மீனவர்களிடமிருந்து கருத்துகளைக் கேட்டறியாமல் இந்த மீனபிடித் துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டமையே மேற்படி சிக்கல்களுக்கு காரணமாக அமைந்துள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி துரதிர்ஷ்டமான நிலையிலிருந்து மீனவ மக்களை மீட்பதற்கு நடவடிக்கையெடுப்பாரா என்பதையும்,

(ii) ஆமெனில், மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்,

(iii) அதற்கு எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0724/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) குருநாகல் மாவட்டத்திலுள்ள சமுர்த்தி கடன் பெறுநர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இக்கடன் வழங்கப்பட்ட வட்டி வீதம் யாதென்பதையும்,

(iii) கடன் வழங்கும் போது கடைப்பிடிக்கப்படும் நடைமுறை யாதென்பதையும்,

(iv) இதுவரை மீட்கப்பட்டுள்ள கடன்தொகை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சமுர்த்தி கடன் பெறுநர்களிடமிருந்து கடனை மீள் அறிவடும் போது உத்தியோகத்தர்கள் தான்தோன்றித்தனமாக செயலாற்றுகின்றனர் என்பதை அவர் அறிவாரா?

(இ) ஆமெனில், அது சம்பந்தமாக மேற்கொள்ளப்போகும் நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0782/ '10

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— சமூக சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் பிறப்பிலேயே அங்கவீனர்களாகவும் பல்வேறு விபத்துகளாலும் நோய்களாலும் அங்கவீனர்களாகவும் ஆகியுள்ள ஆட்களின் எண்ணிக்கை மாவட்ட மட்டத்தில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) மேற்படி அங்கவீனர்களுக்காக அரசினால் வழங்கப்படும் நிவாரணச் சேவைகள் யாவையென்பதையும்,

(iii) அப்பணிகளுக்காக அரசு வருடந்தோறும் செலவு செய்யும் பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0792/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் முலட்டியன வலயக் கல்வி காரியாலயத்திற்குரிய கம்புறுபிட்டிய கோட்டக்கல்வி அலுவலகத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்க பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) இப்பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதையும்,

(iii) இப்பாடசாலைகளில் தற்போது மூடப்பட்டுள்ள அல்லது மூடுவதற்காக தீர்மானிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(iv) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கோட்டத்தில் ஆசிரியர் மிகை நிலவுகின்ற பாடசாலைகள் உள்ளனவா என்பதையும்,

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iv) இவ்வாசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடசாலைகளுக்கு ஆசிரியர்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(v) ஆமெனில், இதற்காக எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்,

அவர் இச்சபைக்குக் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

## (2011, சனவரி 18, செவ்வாய்க்கிழமை)

0664/ '10

கௌரவ அநுர திஸாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) ஆரம்ப காலத்தில் நெற் சந்தைப்படுத்தும் சபைக்கு உரித்தாயிருந்த,

(i) களஞ்சிய சாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

(ii) ஒவ்வொரு களஞ்சியசாலையினதும் அமைவிடம் யாதென்பதையும்,

(iii) மேற்படி களஞ்சியசாலைகளின் கொள்ளளவு தனித்தனியாக எவ்வளவு என்பதையும்,

(iv) ஒவ்வொரு களஞ்சியசாலையிலும் பணியாற்றிய ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(v) வாகனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) தற்போது அரசாங்கத்துக்கு உரித்தாயுள்ள,

(i) நெல் களஞ்சியசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) நெல் களஞ்சியசாலைளின் அமைவிடங்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வொரு களஞ்சியசாலையினதும் கொள்ளளவு மற்றும் ஊழியர் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்,

(iv) நெல் கொள்வனவிற்காக ஒதுக்கப்பட்டுள்ள வாகனங்களின் வகைகள் மற்றும் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) கடந்த 5 வருடங்களில்,

(i) சிறுபோகம், பெரும்போகங்களின் போது ஒவ்வொரு களஞ்சியசாலையினால் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு தனித்தனியே யாதென்பதையும்,

(ii) நெல்லுக்கான கொள்வனவு விலை எவ்வளவென்பதையும்,

(iii) நெல்லுக்கான விற்பனை விலை எவ்வளவென்பதையும்,

(iv) மேற்கூறிய காலத்தினுள் கொள்வனவு செய்யப்பட்ட நெல் கையிலிருப்பில் அழிவடைந்த அளவு எவ்வளவென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0665/ '10

கௌரவ அநுர திஸாநாயக்க,— கமத் தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கந்த 10 வருடங்களில் சிறுபோகம் மற்றும் பெரும் போகங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும்,

(i) விவசாயப் பயிர்கள் பயிரிடப்பட்ட ஹெக்டெயார் அளவு,

(ii) ஒவ்வொரு ஏற்றுமதிப்பயிரும் பயிரிடப்பட்ட ஹெக்டெயார் அளவு,

(iii) ஏற்றுமதிப் பயிர் பயிரிடப்பட்ட ஹெக்டெயார் அளவு

யாதென்பதைத் தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) கடந்த 10 வருடங்களில் ஒவ்வொரு வருடத்திலும்,

(i) பயிரிடப்பட்ட ஒவ்வொரு விவசாயப் பயிர்களிலிருந்தும் பெறப்பட்ட விளைச்சல் போகங்களுக்கிணங்க தனித்தனியாக எவ்வளவு,

(ii) ஒவ்வோர் ஏற்றுமதிப் பயிரினதும் வருடாந்த விளைச்சல் மற்றும் அப்பயிர்களின் ஏற்றுமதிப் பெறுமதி தனித்தனியாக எவ்வளவு,

(iii) அப்பயிர்களின் மொத்த ஏற்றுமதிப் பெறுமதி எவ்வளவு

என்பதை அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல். ஏன்?

0666/ '10

கௌரவ அநுர திஸாநாயக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 1977ஆம் ஆண்டில் இருந்த அரச கமத்தொழில் பண்ணைகளின் எண்ணிக்கை யாதென்பதை அவர் அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு பண்ணையினதும்,

(i) பெயர், பண்ணை அமைக்கப்பட்ட நோக்கம் மற்றும் ஆற்றப்பட்ட பணிகள் யாதென்பதையும்,

(ii) அதன் பரப்பளவு மற்றும் பணிபுரிந்த ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) இலாபம் ஈட்டிய வருடம், பெற்ற இலாபம், இலாபமீட்டிய துறைகள் மற்றும் இலாபம் ஈட்டிய ஒரு சில வருடங்களில் உற்பத்தித் தொகைகள் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி பண்ணைகளில் தனியார்த் துறையினருக்கு ஒப்படைக்கப்பட்ட பண்ணைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவை ஒப்படைக்கப்பட்ட நபர்கள் மற்றும் தற்போதைய உரிமையாளர்கள் யாவர் என்பதையும்,

(iii) அவ்வாறு இவை ஒப்படைக்கப்பட்ட திகதி, விலை விபரம் மற்றும் ஒப்படைப்பின் அடிப்படை நிபந்தனைகள் யாவையென்பதையும்,

(iv) தற்போது தனியார் பண்ணைகளில் ஆற்றப்படும் பணிகள் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) தற்போது அரசுக்குச் சொந்தமான பண்ணைகளில்,

(i) ஆற்றப்படும் பணிகள் யாதென்பதையும்,

(ii) ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(iii) கடந்த ஐந்து வருடங்களில் பெற்ற இலாபம் அல்லது நட்டத்தின் தொகை யாதென்பதையும்,

(iv) கடந்த வருடத்தினுள் உற்பத்தி செய்யப்பட்ட ஒவ்வொரு துறையினதும் உற்பத்திப் பெறுமதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0667/ '10

கௌரவ அநுர திஸாநாயக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) தற்போது மத்திய அரசாங்கத்தில் மற்றும் மாகாண சபைகளில் தாபிக்கப்பட்டுள்ள கமத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் (திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், அதிகாரசபைகள்) யாவையென்பதை இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு நிறுவனமும்

(i) தாபிக்கப்பட்ட திகதிகள், தாபிக்கப்பட்டமைக்கான நோக்கங்கள் மற்றும் மேற்கோள்ளப்படுகின்ற பணிகள் யாவையென்பதையும்,

(ii) உருவாக்கப்பட்டுள்ள பதவிகள் மற்றும் அப்பதவிகளில் தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாவையென்பதையும்,

(iii) பிரதேச மட்டத்தில் செயற்படுகின்ற விதம் மற்றும் அவற்றின் ஒழுங்கமைப்பு ரீதியிலான கட்டமைப்பு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தற்போது கமத்தொழில் சம்பந்தமாக தாபிக்கப்பட்டுள்ள அரச சார்பற்ற அமைப்புகள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு அமைப்பையும் தாபித்தவர்கள் மற்றும் அவற்றுக்கு நிதி வழங்குகின்றவர்கள் யாரென்பதையும்,

(iii) இற்றை வரை மேற்படி அமைப்புகளால் செலவிடப்பட்டுள்ள நிதித் தொகை யாதென்பதையும்,

(iv) மேற்படி ஒவ்வொரு அமைப்பிலும் இருக்கின்ற ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் என்?

0669/ '10

கௌரவ அநுர திஸாநாயக்க,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கையிலுள்ள பாரிய நீர்ப்பாசன திட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு நீர்ப்பாசன திட்டமும் அமைந்துள்ள தொகுதி யாதென்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வொரு நீர்ப்பாசன திட்டத்தின் பெயர் மற்றும் அவற்றின் நீர் மூலங்கள் யாவையென்பதையும்,

(iv) நீரேந்து பிரதேசத்தின் அளவு மற்றும் இவற்றின் கொள்ளளவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு நீர்ப்பாசனத் திட்டமும்,

(i) ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு,

(ii) நிறைவுசெய்யப்பட்ட ஆண்டு,

(iii) மக்கள் உரிமைக்காகக் கையளிக்கப்பட்ட திகதி,

(iv) பூர்த்திசெய்வதற்கு செலவாகிய பணத்தொகை

யாதென்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) கடந்த 20 வருடங்களில் மேற்படி ஒவ்வொரு நீர்ப்பாசன திட்டம் சார்பிலும்,

(i) மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்,

(ii) நிதி ஒதுக்கப்பட்ட ஆண்டுகள் வெவ்வேறாக யாவையென்பதையும்,

(iii) நிறைவேற்றப்பட்ட பணிகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) மேற்படி ஒவ்வொரு நீர்ப்பாசன திட்டத்திற்கமைவாக,

(i) பயிரிடப்பட்டுள்ள காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) கடந்த பத்தாண்டுகளில் சிறு போகம் மற்றும் பெரும் போகங்களின் போது பயிரப்பட்ட காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(iii) குடியேற்றப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0776/ '10

கௌரவ அஜித் குமார,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) ருஹுணு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் தர்ஷன விக்கிரமசிங்க என்பவருக்கெதிராக கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்திலும் அவர் குற்றமற்றவராகக் காணப்பட்டபோதிலும் பல்கலைக் கழகப் பேரவையின் தீர்மானம் ஒன்றின் பிரகாரம் அவர் சேவையிலிருந்து நீக்கப்பட்டார் என்பதையும்,

(ii) மேலே சொல்லப்பட்ட தீர்மானம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் டாக்டர் விக்கிரமசங்கவினால் ஆட்சேபிக்கப்பட்டு மேலே சொல்லப்பட்ட தீர்மானத்திற்கு தடை ஆணை வழங்கப்பட்டதையும்,

(iii) தனக்கு எதிராக ஒரு வன்மமான முறைப்பாட்டை மேற்கொண்டு அதன் விளைவாகத் தனது தொழிலை இழக்கச் செய்த அதே பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் மிரானி வீரசூரிய என்பவரினால் தனக்கு ஏற்படுத்தப்பட்ட சேதத்துக்காக மாத்தறை மாவட்ட நீதிமன்றத்தில் டாக்டர் விக்கிரமசிங்க தனிப்பட்ட வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளார் என்பதையும்,

(iv) இந்தத் தனிப்பட்ட வழக்குக்குக்கூட பேராசிரியர் வீரசூரிய அமர்த்தியுள்ள சட்டத்தரணிகளுக்கு பல்கலைக் கழகம் கொடுப்பனவுகளை மேற்கொள்வதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) ருஹுணு பல்கலைக் கழக அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட மேலே சொல்லப்பட்ட நடவடிக்கைகள் நியாயப்படுத்தக்கூடியனவா என்பதையும்,

(ii) மேலே சொல்லப்பட்ட விடயத்தை விசாரித்து அத்தகைய சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாதவாறு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு பணிக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0777/ '10

கௌரவ அஜித் குமார,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2004, 2005, 2006, 2007, 2008 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் இலங்கை ருஹுணு பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்திற்குக் கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு ஆராய்ச்சி மானியங்களின் பெறுமதி மற்றும் அவற்றின் மூலங்கள் ஆகியவற்றை வெவ்வேறாகவும்,

(ii) மேலே சொல்லப்பட்ட மருத்துவ பீடத்தினால் அந்த நிதிகள் பயன்படுத்தப்பட்ட விதத்தையும்,

(iii) அந்த மானியங்கள் கிடைக்கப் பெற்றமை பற்றியும் அந்த மானியங்களைப் பயன்படுத்தி மேற்கொண்ட ஆராய்ச்சியின் கண்டறிதல்கள் பற்றியும் மருத்துவ பீட மருத்துவச் சபை, செனற் மற்றும் கல்விசார் அதிகார சபைக்குத் தெரிவிக்கப்பட்டதா என்பதையும்,

(iv) இன்றேல், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்காமைக்கான காரணங்களையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) 1978ஆம் ஆண்டின் 160ஆம் இலக்க பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் பிரிவு 99(1) மற்றும் அரசாங்க நிதி ஒழுங்குவிதிகளின் பிரகாரம் இந்நிதிகள் பல்கலைக்கழகக் கணக்குகளில் இடப்பட்டனவா என்பதையும்,

(ii) அவ்வாறின்றேல், கணக்கில் இடப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2011, சனவரி 20, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

0240/ '10

கௌரவ சஜித் பிரேமதாச, — கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்பாந்தோட்டை வலயக் கல்விக் காரியாலயத்திற்குரிய அம்பாந்தோட்டை கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளுக்கும், பொதுவான தேவைகளுக்கும் பற்றாக்குறை நிலவுகிறதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இப்பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற ஆசிரியர் விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) அவற்றிற்குரிய பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(v) மரத்தளபாடங்களுக்கான தேவை காணப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(vi) அத்தேவைகள் யாவையென்பதையும்,

(vii) விஞ்ஞான கூடங்கள் மற்றும் நூலகங்கள் அற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(viii)அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்யத் தேவையான நிதியை அப்பாடசாலை களுக்கு ஒதுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அது எவ்வளவு காலத்தினுள் நடைபெறுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0456/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) கொழும்பு நகரிலுள்ள நடைபாதை வியாபாரிகளினது கடைகள் யாவற்றையும் உடைக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டதை அவர் அறிவாரா?

(ஆ) அவை எப்போது, ஏன் அகற்றப்பட்டன என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) தற்போது கடைகள் யாவும் பூரணமாக அகற்றப்பட்டுள்ளனவா என்பதையும்,

(ii) இன்றேல், அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்,

(iii) நடைபாதை வியாபரிகள் எவராயினும் தமது வியாபார நடவடிக்கையைத் தொடர்ந்து மேற்கொண்டுள்ளனர் எனின் அது சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளதா என்பைதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஈ) (i) அகற்றப்பட்ட நடைபாதை வியாபாரிகளின் எண்ணிக்கையையும்,

(ii) அவர்களுக்கு மாற்று இடங்கள் வழங்கப்பட்டனவா என்பதையும்,

(iii) அவர்களுடைய பெயர்களையும் வழங்கப்பட்ட மாற்று இடங்களையும்,

(iv) கொழும்பு நகரம் தவிர்ந்த ஏனைய இடங்களிலும் இப்பிரச்சினை நிலவுகின்றதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இது ஓர் அரசியல் பழிவாங்கலாக மேற்கொள்ளப்பட்டது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

0530/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், மஹாஓயா - செங்கலடி வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்படடு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல் , வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0660/ '10

கௌரவ அஜித் குமார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) திரு. சுமனசேன ராமசிங்ஹ தென்மாகாண சுகாதார அமைச்சின் ஆயுர்வேத திணைக்களத்தில் சேவைக்குச் சேர்ந்த பதவி மற்றும் திகதி, சேவைக்காலம், ஓய்வு பெற்ற திகதி மற்றுமு் அத்தினத்தில் வகித்த பதவி யாதென்பதையும்,

(ii) இவர் பெற்றுள்ள சேவை நீடிப்புக்களின் எண்ணிக்கை மற்றும் சம்பந்தப்பட்ட வருடங்கள் யாவையென்பதையும்,

(iii) சேவை நீடிப்பினை விதந்துரைத்த உத்தியோகத்தரின் பெயர், பதவி மற்றும் முகவரி யாதென்பதையும்,

(iv) சேவை நீடிப்பின் பெருட்டு பூர்த்தி செய்ய வேண்டிய அளவு கோல்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) திரு. ராமசிங்ஹ பதவிநிலைத் தரத்திற்கு உள்வாங்கப்பட்ட திகதி யாதென்பதையும்,

(ii) பதவிநிலைத் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தரொருவருக்கு உரித்தாகும் சிறப்புரிமைகளும் வசதிகளும் யாவையென்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(இ) (i) திரு. ராமசிங்ஹவின் சேவைக்காலத்தில் ஏதேனும் தவறுக்கான குற்றச்சாட்டுப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது சம்பந்தமாக ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப் பட்டுள்ளதா என்பதையும்,

(iii) இவர் ஏதேனும் தவறுக்குள்ளாகி தண்டனை பெற்றுள்ளாரா என்பதையும்

அவ் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) திரு. ராமசிங்கஹவுக்கு ஓய்வூதியம் வழங்க நியமன அதிகாரியினரால் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்,

(ii) இதனோடு தொடர்புடைய சட்டமுறையான நிலைமை யாதென்பதையும்,

(iii) நிருவாக ரீதியான தவறு காரணமாக திரு. ராமசிங்ஹவின் ஓய்வூதியத்தை தயாரித்தல் தாமதித்திருப்பின், மேற்படி ஓய்வூதியம் தயாரித்து வழங்கப்படுகின்ற காலை வரையறை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0783/ '10

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2005, சனவரி முதல் 2010, மார்ச் 31 ஆம் திகதி வரை கிழக்கு மாகாணத்திலிருந்து சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட படைவீரர்களின் எண்ணிக்கையும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதிகளையும் மாவட்ட மட்டத்தில் வெவ்வேறாக யாவை என்பதையும்,

(ii) அவ்வாறு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட சிவில் பாதுகாப்பு படைவீரர்களில் பல்வேறு விபத்துக்களால் மரணமடைந்தவர்களினதும் அங்கவீனர் நிலைக்கு தள்ளப்பட்டவர்களினதும் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iii) மரணமடைந்த சிவில் பாதுகாப்புப் படைவீரர்களின் வாழ்க்கைத் துணைவர்கள், பிள்ளைகள் மற்றும் அங்கவீன நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளவர்களுக்காக அரசாங்கத்தினால் செயற்படுத்தப்பட்டுள்ள நலனோம்புகைச் சேவைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0793/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் முலட்டியன வலயக் கல்வி காரியாலயத்திற்குரிய திஹகொட கோட்டக்கல்வி அலுவலகத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்க பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) இப்பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதையும்,

(iii) இப்பாடசாலைகளில் நூறு (100) மாணவர்களுக்குக் குறைவாக உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(iv) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கோட்டத்தில் ஆசிரியர் மிகை நிலவுகின்ற பாடசாலைகள் உள்ளனவா என்பதையும்,

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) ஆசிரியர் மிகை நிலவுகின்ற பாடங்கள் யாவையென்பதையும்

(iv) ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(v) ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடங்கள் யாவையென்பதையும்,

(vi) ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் ஆசிரியர் மிகை நிலவுகின்ற பாடசாலைகளுக்கிடையில் ஆசிரியர் சமநிலையைப் பேணுவதற்காக நடவடிக்கை எடுப்பாரா என்பதையும் ,

(vii) ஆமெனில், இதற்காக எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்,

அவர் இச்சபைக்குக் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0835/ '10

கௌரவ. ஆர். யோகராஜன்,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 1995 ஆம் ஆண்டு முதல், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தோட்ட வீடமைப்பு அமைச்சு மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு ஆகியவற்றில் தோட்டங்கள், வீடுகள் கட்டப்பட்டுள்ளன என்பதையும்,

(ii) மேற்படி வீடமைப்புக் கருத்திட்டங்கள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டன என்பதையும்,

(iii) தொழிலாளருக்கு வீட்டுக் கடன்கள் தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் வழங்கப்பட்டு, அவை தவணை முறையில் அவர்களுடைய சம்பளங்களிலிருந்து அறவிடப்பட்டு தேசிய வீடமைப்பு அதிகாரசபைக்கு அனுப்பிவைக்கப்பட்டது என்பதையும்,

(iv) கடனை முழுமையாக செலுத்தியதன் பின்னர் தொழிலாளருக்கு அவ்வீடுகளுக்குரிய வீட்டுரிமை பத்திரங்கள் வழங்கப்படுமென வாக்குறுதியளிக்கப்பட்டது என்பதையும்,

(v) பல பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மேற்படி கடனை முழுமையாக மீளச் செலுத்தியுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீடமைப்புத் திட்டங்களின் பயனாளிகளுக்கு வீட்டுரிமைப் பத்திரங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அவை எப்போது வழங்கப்படுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0844/ '10

கௌரவ விக்டர் அன்ரனி,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) மேன்மைதங்கிய சனாதிபதியவர்களினால் எமது நாட்டினை சுயமாக தலைநிமிரச் செய்யும் தீவிரமான திடசங்கற்பத்துடன் நுரைச்சோலை அனல்மின் நிலையம் ஆரம்பிக்கப்பட்டதென்பதையும்,

(ii) மேற்படி அனல் மின் நிலையத்தை ஆரம்பிக்கும் பொருட்டு நுரைச்சோலையின் சுற்றுப்புறத்தில் வசித்த மக்கள் மேன்மைதங்கிய சனாதிபதியவர்கள் மீது தீவிர நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும், வாக்குறுதியின் பேரில் அகன்று சென்றுள்ளனரென்பதையும்,

(iii) இந்த இடம்பெயர்ந்த மக்களுக்கான வீடுகள், பயிர்ச்செய்கைகள், காணிகள், மின்சாரம், வீதிகள், பொது விளையாட்டு மைதானம், தேவாலயங்கள், பாலர் பாடசாலைகள் மற்றும் சகல விதமான சமூகத் தேவைப்பாடுகளையும் இந்த மின்சாரக் கருத்திட்டம் மூலமாக மீளப்பொற்றுக் கொடுப்பதாக வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதென்பதையும்,

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஆமெனில், அளித்த வாக்குறுதிக்கிணங்க அந்த மக்களுக்காக ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ள பணிகள் யாவையென்பதையும்,

(ii) இற்றைவரை நிறைவேற்றப்படாத பணிகளை துரிதமாக நிறைவேற்றித்தர நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0885/ '10

கௌரவ எம்.ரி. ஹசன் அலி,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கொழும்பு 10, மாளிகாவத்தை பிளேசில் 129/ஏ/22 ஆம் இலக்க விலாசத்தில் வசிக்கும் திரு. முஹம்மதத் ரிசாம் 48 வயுத நிரம்பிய நிரந்தர அங்கவீனர் நிலைக்கு தள்ளப்பட்டுள்ள ஒரு வறிய நபர் என்பதையும்,

(ii) நிரந்தர வருமானம் எதுவும் இல்லாத திரு. ரிசாமுக்கு கிடைக்க வேண்டிய சமுர்த்தி நிவாரணத்தை வழங்குவதற்கு அப்பிரதேச சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) திரு. ரிசாமுக்கும் இவருடைய குடும்ப அங்கத்தினர்களுக்கும் தாமதமின்றி சமுர்த்தி நிவாரண உரிமையை பெற்றுக்கொடுப்பதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0526/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) திஸ்ஸமஹாராம பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள கிரிந்த மீன்பிடித் துறைமுகத்திலுள்ள முகத்துவாரம், இப்பிரதேசத்தைச் சேர்ந்த மற்றும் வெளி இடங்களிலிருந்து வருகை தருகின்ற பெரும் எண்ணிக்கையிலான கடற்றொழிலாளர்களினால் தமது மீன்பிடிக் கலங்களை கடலுக்கு எடுத்துச் செல்வதற்கும் கடலிலிருந்து துறைமுகத்தின் இறங்குதுறைக்கு உட்பிரவேசிப்பதற்குமாக பயன்படுத்தப்படுகின்றதென்பதையும்,

(ii) மேற்படி முகத்துவாரத்தில் அடிக்கடி மணல் நிறைவதனால் கடற்றொழிலாளர்கள் பெரும் அசௌகரியத்திற்கு உட்படுகின்றனரென்பதையும்,

(iii) இதன் காரணமாக பெருமளவு பணச் செலவுடன் அமைக்கப்பட்டுள்ள இந்த மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மீனவர்கள் எதிர்பார்த்திருந்த அபிவிருத்தி ஏற்படவில்லையென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) அடிக்கடி மணல் நிறைகின்ற மேற்படி முகத்துவாரத்திலிருந்து மணலை அகற்றுவதற்கு அரசாங்கத்திற்கு ஏற்படும் செலவு யாதென்பதையும்,

(ii) மேற்படி மீன்பிடித் துறைமுகத்தை விளைவுத் திறன்மிக்க வகையில் பயன்படுத்துவதற்கு நவீன தொழிநுட்பத்தின் உதவியுடன் அபிவிருத்தி செய்வதற்கான திட்டமொன்று உள்ளதா என்பதையும்,

(iii) ஆமெனில், அத்திட்டத்தினை இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா என்பதையும்,

(iv) இதற்கான திட்டமெதுவும் தயாரிக்கப்படவில்லையாயின் அதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0592/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) நாட்டில் தொழிற்படும் எல்லா வானொலி சேவைகளினதும் பெயர்களையும் இந்த வானொலி நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் பணிப்பாளர்களின் பெயர்களையும்,

(ii) அந்த வானொலி சேவைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அலைவரிசைகளின் எண்ணிக்கையையும் அவை யாவை என்பதையும்,

(iii) இவ் ஒவ்வொரு நிலையமும் எந்தத் திகதியிலிருந்து தொழிற்படுகின்றது என்பதையும்,

(iv) அந்நிலையங்களில் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கையையும்,

(v) மேலே சொல்லப்பட்ட வானொலி நிலையங்களினால் கடந்த 5 வருடங்களில் செலுத்தப்பட்ட வரிகள் யாதென்பதையும்

வருடாந்த அடிப்படையிலும் அவர் கூறுவரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0725/'10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) தெதுரு ஓயாத்த திட்டத்துக்கு தனது காணிகள் மூழ்குவதால் இடம் பெயருகின்ற மக்களுக்கு நட்டஈடு வழங்கும் நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அரசினால் வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டிருந்த வசதிகளெதுவும், இவர்களுக்கு மாற்றுக் காணி வழங்கப்பட்ட பிரதேசத்தில் இல்லை என்பதை அவர் அறிவாரா?

(இ) (i) அவ்வாறாயின், உரிய வசதிகள் வழங்குவது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்,

(ii) இந்த இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்ககப்பட்ட மாற்றும் காணிகளில் அத்துமீறிய குடியிருப்பாளர்கள் உள்ளனரா என்பதையும்,

(iii) அவ்வாறான அத்துமீறிய குடியிருப்பாளர்கள் இருப்பார்களேயானால் இக்காணிகளிலிருந்து இவர்களை அகற்ற தலையிடுவாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0784/ '10

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— கால்நடை வளர்ப்பு , கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கிழக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள,

(i) பால் உற்பத்தி விவசாயிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மாதாந்தம் உற்பத்தி செய்யப்படுகின்ற பால் லீட்டர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

(iii) அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்படுகின்ற பால் லீட்டர்களின் அளவு யாதென்பதையும்,

(iv) பால் மாடு வளர்ப்புக்காக அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற மானியங்களும் அதற்காக வருடாந்தம் செலவிடப்படுகின்ற தொகை யாதென்பதையும்,

வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கிழக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக எதிர்காலத்தில் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் யாவையென்பதையும்,

(ii) இதற்காக ஒவ்வொரு மாவட்டத்தின் பொருட்டும் அரசாங்கம் செலவிடுவதற்கு எதிர்பார்க்கின்ற தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0795/ '10

கௌரவ புத்திக பத்திரண,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) மாத்தறை மாவட்டத்தில் ரஞ்சாகொட தொகுதிக்கான பிறப்பு, இறப்பு பதிவாளர் மற்றும் கந்தபட பத்துவ தொகுதிக்கான விவாக (சாதாரண) மேலதிக பதிவாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ்விண்ணப்பங்கள் கோரப்பட்ட திகதி யாதென்பதையும்,

(ii) இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு தேவையான தகைமைகள் யாவையென்பதையும்,

(iii) இப்பதவிற்கு விண்ணபித்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iv) விண்ணப்பதாரர்களின் பெயர்கள் யாவையென்பதையும்

என்பதை அவர் அறிவிப்பாரா?

(இ) (i) குறிப்பிட்ட பதவிக்கான நேர்முகப்பரீட்சை இதுவரை நடாத்தப்பட்டுள்ளதா என்பதைம்,

(ii) இந் நேர்முகப் பரீட்சையில் ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பெற்ற புள்ளிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்,

(iii) நேர்முகப் பரீட்சையில் தகுதிபெற்ற ஒருவர் தற்போது இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரா என்பதையும்,

(iv) அவ்வாறாயின் அவரின் பெயர் யாதென்பதையும்,

(v) இன்றேல் தகுதிபெற்ற ஒருவரை இதுவரை நியமிக்காததற்கான காரணம் யாதென்பதையும்,

(vi) இப்பதவிக்கு ஒருவர் நியமிக்கப்பட்டுவாராயின் அதற்கு தேவைப்படும் காலம் யாதென்பதையும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0854/ '10

கௌரவ அஜித் குமார,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2010, யூன் 30 ஆம் திகதியளவில் வடமேல் மாகாணத்தில் அறிக்கையிடப் பட்டுள்ள யானைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) 2009 ஆம் ஆண்டிலும் 2010, யூன் 30 வரையிலும் வடமேல் மாகாணத்தில் யானை மனித மோதல்கள் காரணமாக இறந்துள்ள யானைகளின் எண்ணிக்கையும் மனிதர்களின் எண்ணிக்கையும் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(iii) இறந்த நபர்களுக்கு இழப்பீடு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) வட மேல் மாகாணத்தில் வனசீவராசி திணைக்களத்தின்,

(i) பணியாட்டொகுதியினர் மற்றும் கடைமை நிலையங்கள் எவ்வளவென்பதையும்,

(ii) பணியாட்டொகுதியினருக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) பணியாட்டொகுதியினருக்காக 2009/2010 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) வடமேல் மாகாணத்தில் யானை மனித மோதல்களை குறைப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் என்?

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

## (2011, சனவரி 20, வியாழக்கிழமை)

0670/ '10

கௌரவ அநுர திஸாநாயக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கடந்த 10 வருடங்களில்,

(i) அரச மற்றும் தனியார் துறைகளது தலையீட்டில் இறக்குமதி செய்யப்பட்ட கமத்தொழிலுக்குரிய பீடைகொள்ளிகளின் (கிருமி நாசினி/களைநாசினி) அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) மேற்படி இரு தரப்புகளாலும் வருடம்தோறும் இறக்குமதி செய்யப்பட்ட ஒவ்வொரு கிருமிநாசினி மற்றும் களைநாசினி வகையினதும் அளவு , விலை மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட நாடு தனித்தனியாக யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0671/ '10

கௌரவ அநுர திஸாநாயக்க,— கமத் தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கந்த 10 வருடங்களாக அரச மற்றும் தனியார் துறையினரின் தலையீட்டுடன்,

(i) உற்பத்தி செய்யப்பட்ட கமத்தொழிலுடன் தொடர்புடைய கிருமிநாசினிகள் மற்றும் களை நாசினிகள் என்பவற்றின் அளவு ஒவ்வொரு பிரிவுக்கமைய வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) வருடாந்தம் உற்பத்தி செய்யப்பட்ட ஒவ்வொரு கிருமிநாசினிகள் மற்றும் களைநாசினிகளின் வகைகளின் அளவு சந்தைப் பெறுமதியில் அரச மற்றும் தனியார் துறைக்கு அமைய வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0672/ '10

கௌரவ அநுர திஸாநாயக்க,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கடந்த 10 ஆண்டுகளினுள் கமத்தொழில் தேவைகளுக்காக,

(i) அரச மற்றும் தனியார் துறைமூலம் இறக்குமதி செய்யப்பட்டுள்ள உரத்தின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி இரு தரப்பாலும் இறக்குமதி செய்யப்பட்ட ஒவ்வொரு உர வகையின் அளவுகள், இறக்குமதி செய்த நாடுகள் மற்றும் விலைகள் வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0673/ '10

கௌரவ அநுர திஸாநாயக்க,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கடந்த 10 வருடங்களில் விவசாய நடவடிக்கைகளுக்காக,

(i) அரச மற்றும் தனியார் துறையினரால் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த உரத்தின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி உற்பத்தி செய்யப்பட்ட உரத்தின் அளவு ஒவ்வொரு உர இனம் மற்றும் உறபத்தி செய்யப்பட்ட துறைகளுக்கமைய வெவ்வேறாக வருடாந்த அடிப்படையில் யாவையென்பதையும்,

(iii) வருடாந்தம் அரச மற்றும் தனியார் துறையினரால் உற்பத்திச் செய்யப்பட்ட மொத்த உரத்தின் சந்தைப்பெறுமதி வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0675/ '10

கௌரவ அநுர திஸாநாயக்க,— கமத் தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கடந்த 10 வருடங்களில்,

(i) அரச மற்றும் தனியார் துறையின் தலையீட்டில் வருடாந்தம் விவசாயத்துடன் தொடர்புடையதாக இறக்குமதி செய்யப்பட்ட விதைகளின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்,

(ii) மேற்குறிப்பிடப்பட்டவாறு இறக்குமதி செய்யப்பட்ட, ஒவ்வொரு விதை வகையினதும் அளவு, பெறுமதி, இறக்குமதி செய்யப்பட்ட நாடுகள் மற்றும் விலை மட்டங்கள், அரச மற்றும் தனியார் துறைக்கு ஏற்பவும் வருடாந்த அடிப்படையிலும் வெவ்வேறாக யாவையை என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0676/ '10

கௌரவ அநுர திஸாநாயக்க,— கமத் தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கடந்த 10 வருடங்களில்,

(i) வருடாந்தம் அரச மற்றும் தனியார் துறை மூலம் கமத்தொழிலுக்காக உற்பத்தி செய்யப்பட்ட ஒவ்வொரு விதை வகையின் அளவுகள் மேற்படி இரு துறைகளுக்கமைய தனித்தனியே எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி விதைகளின் சந்தைப் பெறுமதி வருடாந்த அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0760/ '10

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2010, ஜூலை 29 அன்று டெய்லிமிரர் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரையானது, பாலியல் மற்றும் பால் நிலை தொடர்பான சட்டங்களில் மாற்றங்களுக்காக போராடி வரும் அரச சார்பற்ற நிறுவனங்களைப் பற்றி கீழ்த்தரமான பொதுக் கருத்தை உருவாக்குவதில் ஈடுபட்டுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) அக் கட்டுரையில் காணப்படும் "எதிர்ப்பால் புணர்ச்சித்தன்மையானது காலத்திற்கு ஒவ்வாத மற்றும் வழக்கொழிந்த பழக்கம் எனும் கருத்தை உருவாக்க முனைகின்றவர்கள் மத்தியில் உள்ள சில ராஜதந்திரிகள்" எனும் குறிப்பானது, முற்றுமுழுவதும் தேசியமயமான இலங்கை சட்ட ஆணைக்குழுவினால் மாற்றங்கள் விதந்துரைக்கப்பட்டுள்ள ஒரு விடயப்பரப்பின்மீது அந்நியச் செல்வாக்கு ஏற்படும் அச்சநிலையை தோற்றுவிப்பதை நோக்கமாகக் கொண்டது என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) (i) புறவயமாக விவாதிக்கப்பட்டுக் கலந்துரையாடப்படவேண்டிய விடயங்களில் இருந்து கவனத்தினைத் திருப்பி, வெளிநாட்டவர்களுக்கும் ராஜதந்திரிகளுக்கும் எதிராக குரோத மனப்பான்மையை தோற்றுவிப்பதை நோக்கமாகக் கொண்டு செய்யப்படும் ஊடகத் திரிபுபடுத்தல்களுக்கான இவ்வாறான உதாரணங்களைத் தடுப்பதற்கும்,

(ii) குரோத மனப்பான்மையும் காழ்ப்புணர்வுமிக்க பேச்சும் பரப்பப்படலாகாது என்றும் பேச்சுச் சுதந்திரத்துடன் சேர்ந்து கூடவே பொறுப்புணர்வும் இருக்கவேண்டும் என்றும் இவ்வாறான செய்திப்பத்திரிகைகளுக்குப் பொறுப்பாக இருக்கின்றவர்களுக்கு அறிவுரை வழங்குவதற்கும்

அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## 2011, சனவரி 21, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

0241/ '10

கௌரவ சஜித் பிரேமதாச, — கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்பாந்தோட்டை வலயக் கல்விக் காரியாலயத்திற்குரிய திஸ்ஸமஹராம கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளுக்கும், பொதுவான தேவைகளுக்கும் பற்றாக்குறை நிலவுகிறதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இப்பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற ஆசிரியர் விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) அவற்றிற்குரிய பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(v) மரத்தளபாடங்களுக்கான தேவை காணப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(vi) அத்தேவைகள் யாவையென்பதையும்,

(vii) விஞ்ஞான கூடங்கள் மற்றும் நூலகங்கள் அற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(viii) அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்யத் தேவையான நிதியை அப்பாடசாலை களுக்கு ஒதுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அது எவ்வளவு காலத்தினுள் நடைபெறுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0429/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத் துறை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் வரும் விளையாட்டு அமைப்புக்களின் எண்ணிக்கையினையும்,

(ii) இந்த நிறுவனங்கள் நிறுவப்பட்டுள்ள மாவட்டங்களின் பெயர்களையும்,

(iii) பிரதான பதவிகளை வகிப்போரின் பெயர்களையும்,

(iv) ஏனைய பிரதிநிதிகளின் பெயர்களையும்,

(v) அவர்களின் பிறந்த திகதிகளையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இவற்றுள் சட்டபூர்வமானதாக்கப்பட்டுள்ளவற்றின் பெயர்களையும் எண்ணிக்கையினையும்,

(ii) ஒவ்வொரு நிறுவனத்திற்கும் அரசாங்கம் வழங்கியுள்ள நிதியின் அளவினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 1973ம் ஆண்டின் 25ம் இலக்க விளையாட்டுக் கட்டளைச் சட்டத்தின் கீழும் மற்றும் 1993ம் ஆண்டின் 47ம் இலக்க விளையாட்டுத் திருத்தங்களின் கீழும் இந் நிறுவனங்களின் கணக்குகைளை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டுமா என்பதையும்,

(ii) அவ்வாறான நிறுவனங்களினது கணக்குகளும் கிரிக்கட் சபையின் மத்திய கணக்குகளும் பாராளுமன்றத்திற்கு ஏன் சமர்ப்பிக்கப்படுவதில்லை என்பதையும்,

(iii) கடந்த ஐந்து வருடங்களுக்கான கிரிக்கட் சபையின் கணக்குகளையும்

அவர் அறியத் தருவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0537/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், திருகோணமலை - ஹபரனை வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்படடு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல், வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0785/ '10

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— கால்நடை வளர்ப்பு , கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கிழக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் ,

(i) இறைச்சி உற்பத்தி மற்றும் முட்டை உற்பத்தியின் பொருட்டு கோழி வளர்ப்பில் ஈடுபடுகின்ற விவசாயிகளின் எண்ணிக்கை,

(ii) மாதாந்தம் உற்பத்தி செய்யப்படுகின்ற முட்டைகள் மற்றும் கோழி இறைச்சியின் அளவு,

(iii) கேழி வளர்ப்புக்காக அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற மானியங்களும் அதற்காக வருடாந்தம் செலவிடப்படுகின்ற தொகையும்

வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கிழக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் முட்டை உற்பத்தி மற்றும் கோழி இறைச்சி உற்பத்தியை அதிகரிப்பதற்காக எதிர்காலத்தில் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் யாவையென்பதையும்,

(ii) இதற்காக ஒவ்வொரு மாவட்டத்தின் பொருட்டும் அரசாங்கம் செலவிடுவதற்கு எதிர்பார்க்கின்ற தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0798/ '10

கௌரவ புத்திக பத்திரண,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) மாத்தறை மாவட்டத்தின் அக்குரஸ்ஸ பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அக்குரஸ்ஸ நகரத்தினதும் அதை அண்மித்துள்ள சில கிராமங்களினதும் நீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இற்றைக்கு சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்னர் வெளிநாட்டு உதவிகளின் கீழ் குடிநீர் வழங்கல் கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டதென்பதை அவர் அறிவாரா?,

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்காக நிதி உதவிகள் வழங்கிய நாடு மற்றும் நிதி நிறுவனங்கள் யாவையென்பதையும்,

(ii) இதற்குக் கிடைக்கப் பெற்ற உதவித் தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி நீர் வழங்கல் திட்டத்தை நிறைவு செய்ய வேண்டிய திகதி யாதென்பதையும்,

(iv) அதன் தற்போதைய நிலைமை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி நீர்வழங்கல் திட்டத்தை செயற்படுத்துவதன் மூலமாக பயன்பெறும் நோகத்தைக் கொண்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) இதன் மூலம் மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற காலவரையறை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0845/ '10

கௌரவ விக்டர் அந்தனீ,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) மஹிந்த சிந்தனை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 10 ஆறுகளை ஒரே தடவையில் அபிவிருத்தி செய்யும் முன்மொழிவுக்கு இணங்க ஆரம்பிக்கப்பட்ட தெதுரு ஓயாத் திட்டம் மிகவும் வெற்றிகரமான ஒரு திட்டமென்பதையும்,

(ii) தெதுரு ஓயாத் திட்டத்தின் கீழ் செயற்படும் செங்கல் ஒயத்திட்டத்தின் வேலைகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) தெதுரு ஓயாத் திட்டத்தின் கீழ் புத்தளம் மாவட்டத்தில் போஷிக்கப்படுகின்ற வாவிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவ்வாவிகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) இவ்வாவிகளுக்கருகில் நீர்ப்பாசனத் திட்டங்கள் அமைக்கப்படுமா என்பதையும்.

(iv) இந் நீர்ப்பாசனத் திட்டத்தின் ஊடாக புத்தளம் மாவட்டத்தில் போஷிக்கப்படும் பரப்பளவு யாதென்பதையும்,

(v) இத்திட்டத்தை நிறைவு செய்யத் தேவைப்படும் காலம் யாதென்பதையும்,

(vi) இத்திட்டத்தை துரிதமாக நிறைவு செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0855/ '10

கௌரவ அஜித் குமார,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) வடமேல் மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்படுத்துவதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ள மின்சாரக் கருத்திட்டங்கள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்துக்கும் ஒதுக்கப்பட்டுள்ள நிதித்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்,

(iii) மேற்குறிப்பிட்ட நிதி ஒதுக்கப்பட்ட நிதி மூலங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

0868/ '10

கௌரவ திலிப் வெதஆரச்சி,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளோர் களில் பெருந்தொகையானோர் கரைவலை மீன்பிடிக்கைத் தொழிலில் ஈடுபட்டிருந்தனர் என்பதையும்,

(ii) சுனாமி அனர்த்தம் காரணமாக அனைத்து கரைவலைகளும் அழிந்துபோயுள்ளன என்பதையும்,

(iii) சிறு மீன்பிடி வள்ளங்களை மீன்பிடிக்கைத் தொழிலுக்கு அறிமுகப் படுத்தியதன் மூலம் கரைவலை மீன்பிடிக்கைத்தொழில் பின்னடைவைச் சந்தித்துள்ளதென்பதையும்,

அவர் அறிவாரா?

(ஆ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கரைவலை மீன்பிடிக் கைத்தொழில் மேற்கொள்ளப்படும் துறைமுகங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அந்த மீன்பிடித் துறைமுகங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்திற்கு முன்னர் கரைவலை மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களின் பெயர்களும் பதிவு செய்யப்பட்டிருந்த கரைவலைகளின் எண்ணிக்கையும் ஒவ்வொரு துறைமுகங்களுக்கமைய வெவ்வேறாக யாவையென்பதையும்,

(ii) சுனாமி அனர்த்தத்திற்குப் பின்னர் மேற்படி மீன்பிடித் துறைமுகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள கரைவலைகளின் எண்ணிக்கையும், கரைவலை மீனவர்களின் பெயர்களும் யாவையென்பதையும்,

(iii) சுனாமி அனர்த்தம் காரணமாக கரைவலைகளை இழந்த கரைவலை மீனவர்களுக்கு அரசாங்கம் வழங்கியுள்ள நிவாரணங்கள் யாவையென்பதையும்,

(iv) அந்நிவாரணங்கள் கிடைக்கப்பெற்றவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்,

(v) மேற்படி நிவாரணங்கள் இதுவரை கிடைக்காத கரைவலை மீனவர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0515/ '10

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) பொதுமக்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக வாடகை அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள முச்சக்கர வண்டிகளுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் ரூபா 1500.00 மாதாந்த எரிபொருள் மானியத்தைப் பெறுவதற்கு இதுவரையில் பதிவு செய்யப்பட்டுள்ள அம்பாந்தோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த முச்சக்கர வண்டி உரிமையாளர்களின் எவ்வளவென்பதையும்,

(ii) இவர்களில் இதுவரையில் மேற்படி எரிபொருள் மானியம் வழங்கப்பட்டுள்ள முச்சக்கர வண்டி உரிமையாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iii) இவர்களின் பெயர்கள், முகவரிகள், முச்சக்கர வண்டிகளின் இலக்கங்கள் மற்றும் மேற்படி மானியத்தை முதன் முதலாக வழங்கிய திகதிகள் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் தனித்தனியே யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0593/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) நாட்டில் இயங்கும் சகல தொலைக்காட்சி நிலையங்களினது பெயர்களையும் அவற்றின் உரிமையாளர்களினதும், பணிப்பாளர்களினதும் பெயர்களையும்,

(ii) அத்தொலைக்காட்சி நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அலைவரிசைகளின் எண்ணிக்கையினையும் அவ்வலைவரிசைகளின் இலக்கங்களையும்,

(iii) அவை ஒவ்வொன்றிலும் பணியாற்றும் ஆட்களின் எண்ணிக்கையினையும்,

(iv) அந்நிலையங்கள் ஒவ்வொன்றும் இயங்கத் தொடங்கிய திகதியினையும்,

(v) மேற்குறிப்பிட்ட தொலைக்காட்சி நிலையங்களினால் கடந்த 5 வருடங்களில் செலுத்தப்பட்டுள்ள வரிகளின் தொகையினை வருடாந்த அடிப்படையிலும்,

(vi) வெளிநாட்டுப்படங்களின் இறக்குமதிக்காக ஒவ்வொரு ஒளிபரப்புச் சேவையினாலும் கடந்த 5 வருடங்களாகச் செலுத்தப்பட்டுள்ள வரிகளின் தொகையினை வெவ்வேறாகவும்,

அவர் அறியத் தருவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0786/ '10

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கிழக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும்,

(i) உவர் நீர் மற்றும் நன்னீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்ற விவசாயிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மாதாந்தம் உற்பத்தி செய்யப்படுகின்ற உவர் நீர் மற்றும் நன்னீர் மீன்களின் அளவு யாதென்பதையும்,

(iii) உவர் நீர் மற்றும் நன்னீர் மீன்பிடித் தொழிலுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற மானியங்களும் அதற்காக வருடாந்தம் செலவிடப்படுகின்ற தொகை யாதென்பதையும்

வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கிழக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் உவர் நீர் மற்றும் நன்னீர் மீன்பிடித் தொழிலின் மேம்பாட்டுக்காக எதிர்காலத்தில் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் யாவையென்பதையும்,

(ii) இதற்காக ஒவ்வொரு மாவட்டத்தின் பொருட்டும் அரசாங்கம் செலவிடுவதற்கு எதிர்பார்க்கின்ற தொகை எவ்வளவென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0799/ '10

கௌரவ புத்திக பத்திரண,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 1994 தொடக்கம் இதுவரை திறந்த பல்கலைக்கழகத்துக்கு வருடாந்தம் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்த்துக்கும் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) அரசாங்கத்தினால் திறந்த பல்கலைக்கழகங்களுக்கு வருடாந்தம் ஒதுக்கப்படும் பணம் எவ்வளவு என்பதையும்,

(iii) ஒரு மாணவரிடமிருந்து ஒரு வருடத்துக்காக அறவிடப்படும் பணம் எவ்வளவு என்பதையும்,

(iv) 1994 தொடக்கம் இதுவரை வெளிநாட்டுக்கடன்கள் அல்லது உதவிகளின் கீழ் மேற்படி பல்கலைக்கழகத்துக்கு கிடைத்த நிதியின் அளவு வருடாந்தம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(v) மேற்கூறிய கால எல்லைக்குள் வெளிநாட்டுக் கடன்கள் உதவிகள் மற்றும் அரச நிதி ஒதுக்கீடுகள் ஆகிய மூன்று துறைகள் ஊடாக ஒவ்வொரு வருடத்திலும் மேற்படி பல்கலைக்கழகத்துக்கு கிடைத்த பணம் எவ்வளவு என்பதையும்

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 1994 தொடக்கம் 2009 வரை பல தரப்பட்ட பாடநெறிகளின் கீழ்ப் பட்டம் பெற்றுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு,

(ii) மேற்படி பட்டதாரிகளின் எண்ணிக்கை வருடாந்தம் வெவ்வேறாக எவ்வளவு,

(iii) ஒவ்வொரு பாடநெறிக்கமைய பட்டதாரி ஒருவரை உருவாக்குவதற்கு ஏற்படும் செலவு எவ்வளவு,

(iv) மாகாண அடிப்படையில் உருவாக்கப்பட்ட பட்டதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0832/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) உலக மரபுரிமையொன்றாகிய சிங்கராஜ வனத்திற்குச் சொந்தமான காணியின் அளவு யாதென்பதையும்,

(ii) 2009 யூலை 22ஆம் திகதிய அமைச்சரவை நிருபத்தின்படி சிங்கராஜ வனத்தை விஸ்தரிப்பதற்காக வனப்பாதுகாப்புத் திணைக்களத்திற்கு சுவீகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள காடுகள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி காடுகள் தற்போது சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதா என்பதையும்,

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சிங்கராஜவனத்திற்காக வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகள் தற்போது குத்தகைக்கு விடப்பட்டுள்ளனவா என்பதையும்,

(ii) ஆமெனில், மேற்படி காணிகள் குத்தகைக்கு விடப்பட்டுள்ள நிறுவனம், குத்தகை கால எல்லை, மற்றும் குத்தகை உடன்படிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) மேற்படி அமைச்சரவை நிருபத்தின் படி செயலாற்றி சம்பந்தப்பட்ட காடுகளை வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0846/ '10

கௌரவ விக்டர் அந்தனீ,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கமநெகும கருத்திட்டத்தின் கீழ் புத்தளம் மாவட்டத்தில் சிறு வாவிகளை அபிவிருத்தி செய்வதற்கு ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(ii) அபிவிருத்தி செய்யப்படும் வாவிகளின் பெயர்கள் யாவையென்பதையும்

என்பதை அவர் அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கருத்திட்டத்தின் கீழ் புத்தளம் மாவட்டத்தில் சிறு வாவிகளை அபிவிருத்தி செய்வதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு பிரதேச செயலாளர், கம நல சேவை உத்தியோகத்தர், கமநல சேவை உதவிப் பணிப்பாளர் மற்றும் கமநல சேவைத் திணைக்களத்தின் கமநல சேவை ஆணையாளர் நாயகம் ஆகியோருக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதென்பதையும்,

(ii) அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கான நீண்ட செயற்பாடு காரணமாக வாவிகளை மறுசீரமைக்கும் விவசாய அமைப்புக்களுக்கு மழை காலத்துக்கு முன்பு உரிய விதத்தில் தமது நடவடிக்கைகளை நிறைவு செய்துகொள்ள முடியாமல் பெரும் அசௌகரியங்களை எதிர்காள்ள நேரிடுகின்றதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) சிறிய குளங்களுக்கான அபிவிருத்திக் கருத்திட்டங்களை, கமநல சேவைகள் அதிகாரி மற்றும் பிரதேச செயலாளர் மூலம் மாத்திரம் பரிந்துரை பெற்று, விவசாய அமைப்புக்களுக்கு பெற்றுக்கொடுக்கவும்,

(ii) அதன் மூலம் இரண்டு வார சிறு கால எல்லைக்குள் இச்சிறு குளங்கள் அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்த முடியுமான வேலைத்திட்டம் ஒன்றை மேற்கொள்ளவும்

அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதை இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0856/ '10

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2005 - 2010 ஆம் ஆண்டு வரையான கால கட்டத்தில் வடமேல் மாகாணத்திற்காக கல்வி அமைச்சரினால் ஒதுக்கப்பட்ட நிதி வருடாந்த அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) 2005 - 2010 ஆம் ஆண்டு வரையான கால கட்டத்தில் வடமேல் மாகாணத்தில் நியமனம் வழங்கப்பட்ட ஆசிரியர்கள் பற்றிய அறிக்கையையும் மூடப்பட்ட பாடசாலைகள் பற்றிய அறிக்கையையும் தனித்தனியாக அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், என்?